**செய்தி வெளியீடு எண்: 28** **நாள்: 17.01.2013**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (17.1.2013) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி என்.பி.ஏ. சென்டினரி பாலிடெக்னிக் கல்லூரியில் பயின்ற ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவ, மாணவியருக்கென கல்லூரி நிருவாகத்திற்கு 1999 – 2000 முதல் வழங்கப்பட வேண்டிய கல்விக் கட்டண சலுகைத் தொகையான 39 லட்சத்து 24 ஆயிரத்து 500 ரூபாய்க்கான வரைவோலையை நீலகிரி தோட்ட அதிபர்கள் சங்கத் (The Nilgiri Planters' Association) தலைவர் திரு. சுரேஷ் ஜேக்கப் அவர்களிடம் வழங்கினார்கள்.

கல்லூரி கல்வி இயக்கக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் அரசு நிதியுதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ, மாணவியருக்கு கல்வி கட்டணச் சலுகை 1977-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

இந்தச் சலுகை சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் பட்டம், பட்ட மேற்படிப்பு, தொழிற்கல்வியில் பட்டம், பட்ட மேற்படிப்பு மற்றும் இதர போஸ்ட் மெட்ரிக் கல்வி பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினருக்கு அளிக்கப்படவில்லை. எனவே, சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதி திராவிட, பழங்குடியின மாணவ, மாணவியருக்கும் இந்தக் கட்டணச் சலுகை அளிக்கப்பட வேண்டும் என்று பல்வேறு அமைப்புகளிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றன. இதன் அடிப்படையில், சுயநிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின் மூலம் பயிலும் ஆதி திராவிட, பழங்குடியின மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ, மாணவியருக்கு கல்வி கட்டணச் சலுகை அளிக்க 2000 ஆம் ஆண்டு அரசு உத்தரவிட்டது.

இதன் அடிப்படையில், கல்விக் கட்டண சலுகை அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு 1999 - 2000 ஆண்டு முதல் வழங்கப்படவில்லை என்றும், அதனை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அரசு மானியம் பெறும் பொறியியல் கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை வைத்தன.

இந்தக் கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாட்டிலுள்ள அரசு மானியம் பெறும் 3 பொறியியல் கல்லூரிகள் மற்றும் 34 பாலிடெக்னிக் கல்லூரிகளில் பயின்ற ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ மாணவியருக்கென வழங்கப்பட வேண்டிய கல்வி கட்டணச் சலுகையான 7 கோடியே 42 லட்சத்து 23 ஆயிரத்து 825 ரூபாயினை அரசு மானியம் பெறும் 3 பொறியியல் கல்லூரிகள் மற்றும் 34 பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு வழங்க உத்தரவிட்டார்கள்.

இதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், நீலகிரி மாவட்டம், கோத்தகிரி என்.பி.ஏ. சென்டினரி பாலிடெக்னிக் கல்லூரியில் 1999–2000 ஆம் ஆண்டு முதல் கல்வி பயின்ற ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ, மாணவியர்களுக்கென வழங்கப்பட வேண்டிய கல்வி கட்டண சலுகைத் தொகையான 39 லட்சத்து 24 ஆயிரத்து 500 ரூபாய்க்கான வரைவோலையை, நீலகிரி தோட்ட அதிபர்கள் சங்கத் (The Nilgiri Planters' Association) தலைவர் திரு. சுரேஷ் ஜேக்கப் அவர்களிடம் வழங்கினார்கள். அப்போது, ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ–மாணவியர் கல்வியில் அதிக அக்கறை செலுத்தி அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

இந்தச் சந்திப்பின்போது, உயர் கல்வித் துறை அமைச்சர், உயர்கல்வித் துறையின் முதன்மைச் செயலாளர், தொழில்நுட்பக் கல்வி ஆணையர் மற்றும் நீலகிரி தோட்ட அதிபர்கள் சங்க நிருவாகிகள் உடன் இருந்தனர்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 17.1.2013